**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376 /2019 PW . 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராதா | தந்தை/கணவர் பெயர்: ராஜா | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026

---

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

**18.03.2026 முதல் விசாரணை:**

1. நான் எஸ்.எஸ். கோட்டை காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன் . நான் சிங்கம்புணரி மணப்புரம் வங்கியில் பணிபுரிந்தேன் . நான் மேற்படி வங்கியில் House keeping வேலை பார்த்தேன். 01.02.2017 தேதியன்று வேலைக்கு சேர்ந்தேன். அப்போது மேலாளராக பாலகுரு இருந்தார் . உதவி மேலாளராக மனோகரன் இருந்தார் . மணிமேகலை கேசியராக இருந்தார். நாங்கள் நால்வர் தான் வேலை பார்த்தோம் . அந்த காலக்கட்டத்தில் தான் மேற்படி வங்கி கிளை ஆரம்பிக்கப்பட்டது . எதிரிகள் நான் பணிபுரிந்த வங்கியில் கணக்காளராக பணிபுரிந்து ஆடிட்டிங் புரிந்து வருவார் . 2 ம் எதிரி உதவி மேலாளராக இருந்தார்.

2. ஜீன் மாதத்தில் வேலை பார்த்து கொண்டிருக்கும் போது மேலாளரர் பாலகுரு லீவில் இருந்தார். மனோகரன் உதவி மேலாளரர் 1 மாதத்திற்கு முன்பு பணியை விட்டு சென்று விட்டார். ஆடிட்டர் ஒருவர் வங்கியை பரிசோதித்த போது 4 நகை பாக்கெட் காணவில்லை என்றும், 4 நகையும் போலியாக உள்ளது என்று சொன்னார். சதீஸ்குமார் மேல் அதிகாரிக்கு தகவல் சொல்லி மேல்அதிகாரிகள் உடனே வந்துவிட்டார்கள் . மேல் அதிகாரிகள் இராஜ்குமார், சுரேஷ் ஆகியோர் வந்து விட்டார்கள் . அன்றையை தினம் தான் எனக்கு நகை களவு போனது தெரியும் . மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது . வழக்கு பற்றி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3. தணிக்கை நடந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது . என் முன்பாக தணிக்கை எதுவும் நடக்கவில்லை . தணிக்கை விவரங்கள் ஆடிட்டர் வந்து

சொன்னபிறகு தான் தெரியும் . House keeping வேலை தவிர வேறு வங்கி நடவடிக்கைகள் பற்றி கேட்க அதிகாரம்இல்லை . 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் வங்கியில் பணிபுரிந்தவர்கள் கேட்டு கொண்டததற்கு கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1 **ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4. 1ம் எதிரி 2ம் எதிரியின் குறுக்கு விசாரணையை Adopt செய்து கொள்கிறார். 1 ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல